# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 24.07.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் U.K. ஆண்டு மாநாடு தொடங்குகிறது. U.K. ஜமாஅத் கடந்த 32 வருடங்களாக தனது ஜல்ஸாவை கொண்டாடி வருகிறது. காலத்தின் கலீஃபா அங்கு இருப்பதால் பல்வேறு நாடுகளின் முஸ்லிம்கள் இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்ள அதிகம் முயற்சி செய்கின்றனர். மற்ற முஸ்லிம்கள், அஹ்மதிய்யா ஜமாஅத்தை உலகிலுள்ள மற்ற ஜமாஅத்துகளை விட்டு வித்தியாசமானதாக கருதுகின்றனர். எனவே அவர்கள் தமது விருப்பத்தை நம்மிடம் வெளிப்படுத்துகின்றனர். தமது தூதுச் செய்தியை வாசிக்கவும் செய்கின்றனர். ஆப்பிரிக்காவைத் தவிர மற்ற நாடுகளிலிருந்தும் முஸ்லிம்கள் வருகின்றனர். சிறப்பான ஒரு தாக்கம் பெற்றுச் செல்கின்றனர். அவர்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளை ஜல்ஸாவிற்குப் பிறகு வரும் குத்பாக்களில் கூறுகிறேன். இப்போது அஹ்மதி விருந்தாளிகள், விருந்தோம்புபவர்களுக்கு சில விஷயங்களை கவனமூட்டப் போகிறேன். அதுவும் குறிப்பாக விருந்தாளிகளுக்கு சில விஷயங்களை கூற விரும்புகிறேன்.

விருந்தோம்புபவர்களுக்கு அவர்களின் பொறுப்பு குறித்து கடந்த குத்பாவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாழ்க்கைச் சம்பவங்களை எடுத்து வைத்து விளக்கினேன். இன்று சில விஷயங்களை விருந்தோம்புபவருக்கும் இன்னும் பல விஷயங்களை விருந்தாளிகளுக்கும் கூற உள்ளேன். நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த ஜல்ஸா பல்வேறு சமுதாயங்களுக்கு, நாடுகளுக்கு நடுவில் நடைபெறும் ஒரு மாநாடு என்ற தகுதியை பெற்று விட்டது. ஜமாஅத்தைப் பற்றி நல்லபிப்பிராயம் கொண்ட பலரும் கலந்து கொள்கின்றனர். மூன்று நாட்கள் நிகழ்ச்சிகளில் தமது வசதிக்கேற்ப சில நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள வருகின்றனர். இன்னும் நமக்கு சுற்றுப்புறத்தில் இருக்கக்கூடியவர்கள் நம்மையும் மற்ற முஸ்லிம்களைப் போன்று கடின சித்தம் உள்ளவர்களாக கருதுகின்றனர். இதனால் இவர்களின் கருத்தின்படி இந்த கடின இயல்பினால் உலகில் குழப்பங்கள் பரவுகின்றன. எனவே சந்தர்ப்பம் கிடைக்கும்போது மற்ற மக்கள் இருக்கும் அவையில் இஸ்லாம் குறித்த அவர்களின் தப்பெண்ணத்தை அகற்ற விரும்புகிறேன். இஸ்லாத்தின் போதனை கடினத்தை வலியுறுத்தும், முரட்டுத்தனத்தை விரும்பும் போதனையன்று.

இஸ்லாத்தின் போதனை அன்பு நேச்தை போதிக்கிறது. அந்த போதனையை மிகவும் சரியான விதத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இக்காலத்தில் எடுத்து வைத்தார்கள். இந்த அடிப்படையில் இஸ்லாமிய போதனை பற்றி தவறாகப் புரிந்து வைத்திருப்பவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை எடுத்து வைப்பேன். அதனால் இஸ்லாத்தின் சிறப்புத்தன்மை தெளிவுபடுகின்றது.

இஸ்லாத்தின் போதனை சமாதானத்திற்கு அடித்தளம் அமைக்கக் கூடியதும், மிகவும் அன்பு நிறைந்ததும் ஆன போதனையாகும். உலகில் தோன்றிய எல்லா நபிமார்களையும் அவர்கள் பார்ஸியில் தோன்றி இருந்தாலும், சீனாவில் தோன்றி இருந்தாலும் அல்லது உலகின் எந்தப் பகுதியில் தோன்றியிருந்தாலும் சரி அவர்களை உண்மையாளர்களாக கருத வேண்டும். அவர்களின் மீது இறைவன் கோடிக்கணக்கான உள்ளங்களில் அன்பை ஏற்படுத்தியுள்ளான். அவர்களின் மார்க்கத்தின் வேரை நிலைநாட்டினான். அம்மார்க்கங்கள் பல நூற்றாண்டுகள் வரை உலகில் நிலைநின்றது. இந்த இலக்கணத்தையே குர்ஆனும் நமக்கு கற்பிக்கிறது. இந்த இலக்கணத்தின் அடிப்படையில் உலகில் உள்ள எல்லா மதத்தின் நிறுவனர்களும் கண்ணியத்துடன் பார்க்கப்படுகின்றனர். இந்து மதத்தின் தலைவர்களாகட்டும்; பாரசீக மதத்தின் தலைவர்களாகட்டும்; சீனர்களின் மதத் தலைவர்களாகட்டும்; யூத மத

தலைவர்களாட்டும் அல்லது கிறிஸ்தவ மதத்தின் தலைவர்களாகட்டும். எந்த மதத்தின் தலைவர்களுக்கும் இது பொருந்தும்.

எனவேதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இஸ்லாம் ஒரு தூய மார்க்கமாகும். அது எந்த மார்க்கத் தலைவரின் மீதும் தாக்குதல் தொடுக்கவில்லை. மகத்தான வேதமாகிய திருக்குர்ஆனும் சமுதாய ஒற்றுமைக்கு அடித்தளமிட்டுள்ளது. ஒவ்வொரு சமுதாயத்தின் நபியையும் அது ஏற்றுக் கொண்டுள்ளது. இப்பொருள் இஸ்லாத்திற்கு மட்டுமே உரியது. அது நபிமார்களைப் பற்றி இவ்வாறு போதிக்கிறது.

லா நுஃபர்ரிகு பைன அஹதிம் மின்ஹும் வநஹ்னு லஹூ முஸ்லிமூன் – அதாவது முஸ்லிம்களே கூறுங்கள். நாங்கள் எல்லா நபிமார்களையும் ஈமான் கொள்கிறோம். சிலரை ஏற்று, சிலரை மறுத்து நபிமார்களுக்கிடையில் எந்த வேறுபாடும் காட்டமாட்டோம். இந்த வசனம் ஆலி இம்ரானில் உள்ளது.

ஆகவே இந்த போதனையினால் உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும். பெரியவர்கள் மதத் தலைவர்களின் கண்ணியம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இறைவன் புறமிருந்து வருபவர்கள், வந்திருப்பதாக வாதம் செய்பவர்கள் ஆகியோர்களை ஏற்றுக் கொண்டிருக்கும் மக்கள் அப்பெரியோர்களை இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக நம்புகின்றனர்.

ஒரு ஜமாஅத் அவர்களைப் பின்பற்றுகிறது. இந்நிலையில் அவர்களுக்கு கண்ணியம் செய்யுங்கள். இந்த போதனைகளைக் கொண்ட ஒரு மதத்தை கடின இயல்பை விரும்பும், முரட்டுத்தனத்தை விரும்பும் மதம் என்று கூறுவது, அத்தகைய மதத்தின் மீது தப்பெண்ணம் கொள்வது நீதிக்கு மாற்றமானது மட்டுமின்றி அநியாயமும் ஆகும். எனவே நான் எனது அண்மையில் உள்ள சுற்றுப்புறத்தாரிடம் கூறிக் கொள்வேன். இந்த ஜுமுஆவிற்குப் பிறகு பலதரப்பட்ட பிரதிநிதிகள் வருவார்கள். அவர்களிடம் இவ்விஷயங்கள் போய்ச் சேர வேண்டும். நம்மைப் பற்றி எல்லா தப்பெண்ணங்களையும் அகற்றி விட்டு உங்கள் உள்ளத்தை தூய்மைப்படுத்துங்கள்.

நமது கட்டளை என்னவெனில், எதிரிகளின் விஷயத்தில் கூட உங்கள் உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சியின்றி உள்ளத்தை தூய்மையாக்குங்கள். நமது மார்க்கத்தில் – இஸ்லாத்தில் அண்டை அயலாரின் உரிமைகளைப் பற்றி எந்த அளவு வலியுறுத்தப்பட்டுள்ளது என்றால் சில சமயம் அண்டை அயலாருக்கு நமது சொத்தில் இருந்து பங்கு தர வேண்டுமோ என்று சஹாபாக்கள் கருதும் அளவுக்கு அப்போதனை மிகவும் அழுத்தமாக இருந்தது. எனவே நம்மைப் பற்றி இப்பகுதியில் உள்ள மக்களுக்கு எதுவும் தப்பெண்ணம் இருந்தால் அதனை அகற்றி விடட்டும். நாம் அன்பு, நேசம், அடியார்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக வந்துள்ளோம். அத்தோடு நம் மீது நல்ல அபிமானம் கொண்ட பிற மக்களும் உள்ளனர். அம்மக்கள் எப்போதும் நமக்கு உதவி செய்யத் தயாராக இருப்பவர்கள் ஆவர். அவர்களுக்கும் நாம் நன்றி கூறிக்கொள்கிறோம். இந்நாட்களில் இப்பகுதியில் அவர்களுக்கு சில சிரமங்கள் ஏற்படலாம். மேலும் எல்லா வகையிலும் தொண்டாற்றுகின்ற எல்லா அஹ்மதிகளுக்கும் நாம் நன்றி கூற வேண்டும். இரண்டாவது நமது நண்பர்கள், அபிமானிகள் ஆகியோருக்கும் நன்றி கூறுகிறோம். ஏனெனில் இஸ்லாத்தின் போதனை எல்லா மத நிறுவனர்களையும் கண்ணியத்துடன் பார்க்க பணிக்கின்றது. எனவே நாம் நமது ஈமானுக்கேற்ப எல்லா நபிமார்களையும் கண்ணியம் செய்கிறோம். மேலும் நமது நபியும் எஜமானரும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி மேற்கத்திய நாடுகளில் வீணான கருத்துக்களை வெளியிடுகின்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அன்னாரின் மனைவிமார்கள், அன்னாரின் சஹாபாக்கள் ஆகியோரை இழிவுபடுத்த முயற்சி செய்கின்றனர். முஸ்லிம்கள் உடனே அதற்கு எதிர்நடவடிக்கையில் இறங்குகின்றனர். அஹ்மதியல்லாத முஸ்லிம்களுக்கு கிலாஃபத் என்ற அருள் இல்லாததாலும், வழிகாட்டல் இல்லாததாலும் முரட்டுத்தனமான எதிர்நடவடிக்கைகளில் இறங்கிவிடுகின்றனர். அஹ்மதிய்யா ஜமாஅத்தும் எதிர்நடவடிக்கை எடுக்கவே செய்கின்றது. ஆனால் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் எதிர்நடவடிக்கை இஸ்லாத்தின் அழகிய போதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை

உலகின் முன் எடுத்து வைப்பதன் மூலம் செய்யப்படுகின்றது. முஸ்லிம்களின் தவறான எதிர்நடவடிக்கையின் காரணத்தாலும் பெயர் தாங்கி உலமாக்கள் வேறு முஸ்லிம்களின் உணர்வுகளை தூண்டி விடும் புத்தகங்களை வெளியிட்டு முஸ்லிம்களை தூண்டி விடுகின்றனர். இந்நிலையில் அமைதியை நிலைநாட்ட ஒருவரையொருவர் மதிப்பது மிகவும் அவசியமாகும். தவறாக நம்மைப் பற்றி கருதிக் கொண்டிருக்கிற நமது அண்டை அயலாரின் உண்மையை கவனித்து நீதியை நிலைநாட்ட பாடுபடுங்கள். நாம் அன்பு நேசத்தால் உங்கள் உள்ளங்களை வெல்வதற்கே வந்துள்ளோம். நம்முடன் எதிர்ப்பு காட்டக் கூடியவர்கள் மீதும் கூட நமது உணர்வு நல்லதாகவே உள்ளது. அஹ்மதிகளிடம் கூறுகிறோம். மற்றவர்களைக் குறித்து இவ்வாறு நீண்ட விஷயங்களை நான் கூறியுள்ளேன். காரணம் நீங்களும் உங்கள் பொறுப்புகளை உணர வேண்டும் என்பதற்காகத்தான். அதுவன்றி விருந்தாளியின் பொறுப்புகளையும் – அவற்றைப் பற்றி இப்போது நான் கூறப்போகிறேன். ஒவ்வொரு அஹ்மதியும் அவர் டூட்டி தருபவராக இருப்பினும் சரி தமது பொறுப்பை உணர வேண்டும். ஜல்ஸாவில் கலந்து கொள்ள வந்துள்ள ஒவ்வொரு ஆண், பெண், சிறுவர், பெரியவர் அனைவரும் உங்கள் பொறுப்புகளை உணருங்கள். எவ்வாறு தான் சேவை செய்தாலும் சிலருக்கு புகார் செய்வதற்கு வாய்ப்பு கிடைத்து விடுகிறது. ஒரு பெரிய அளவில் ஏற்பாடு செய்யும் போது எவ்வளவுதான் கவனமாக செயல்பட்டாலும் 100% perfecton என்பது சாத்தியமில்லை என்பதை அவர்கள் உணர்ந்துதான் இருக்கிறார்கள். எனவே குறைபாடுகள் குறித்து பெரியதாக எடுத்துக் கொள்ளாமல் விடுபவர்களும் சிலர் உள்ளனர். எனவே குறைகளை பெரிதாக எடுத்தக் கொள்ளாதவர்கள் அல்லது எப்போதும் குறைகளையே தேடிக் கொண்டிருப்பவர் எவருக்கும் குறைகளை உணர வாய்ப்புத் தராமல் செயல்பட முயல வேண்டும்.

சிலர் ஆட்சேபனை செய்வதற்காக காரணங்களை தேடிக் கொண்டே திரிகிறார்கள். நாம் துஆ செய்ய வேண்டும். காரணம் தேடுபவர்களும் குறைசொல்ல எதுவும் கிடைக்காமல் போவதற்காகவும் துஆ செய்ய வேண்டும். ஜல்ஸா சாலானாவின் ஏற்பாட்டாளர் போக்குவரத்துகளை ஒழுங்குபடுத்த சில ஏற்பாடுகளை செய்துள்ளனர். அதனை மதியுங்கள். நாட்டின் போக்குவரத்து விதிகளை மதிப்பதும் ஒவ்வொருவருக்கும் கடமையாகும். சின்ன குறுகிய சாலை தான். நாம் விரும்பிய இடத்தில் கார்களை நிறுத்தலாம்; பிரச்சனையில்லை என்று கருதாதீர்கள். வெளியிலிருந்து வரக்கூடிய சிலரும், இங்கிலாந்திற்குள் இருந்தே வரும் சிலரும் இவ்வாறு கவனமற்ற செயலில் ஈடுபட்டு விடுகின்றனர். இவ்வாறு எல்லா குறுகிய சாலைகளிலும் கார்களை நிறுத்தி வைத்தால் அப்போதும் எல்லா போக்குவரத்தும் திணறி நின்று விடும். பிறகு நமக்கு இரு புறத்திலும் உள்ள மக்களின் குடியிருப்பு பகுதியிலும், யார் வீட்டின் முன்னும் காரை நிறுத்தாதீர்கள். இரு வருடங்களுக்கு முன்னர் அவ்வீட்டினர் தரப்பிலிருந்து புகார்கள் எழுந்தன. குறிப்பாக மழை நாட்களில் புகார் வந்தது. பிறகு இன்றும் கூட மழையினால் சிறிது பிரச்சனைகள் போக்குவரத்தில் ஏற்படலாம். வெளியில் உள்ள மக்கள் உள்ளே வருவதற்கு சிரமப்படலாம். எனவே காரை ரோட்டு ஒரத்தில் நிறுத்த வேண்டாம். இரண்டு வருடம் முன்பே இந்த புகார் எழுந்தது. இதனால் நமது இப்பகுதியின் அண்டை அயலார் தவறாக பேசியுள்ளனர். இப்போது ஜமாஅத் ஏற்பாட்டாளர்கள் சில ஏற்பாடுகளை செய்துள்ளனர். அதுபோன்ற பிரச்சனை எழக்கூடாது என்று கவனமாக உள்ளனர். ஆனால் எந்த அஹ்மதியையும் பார்த்து ஏற்பாட்டாளர்கள் வந்து அறிவுரை கூறும்படி நடந்து கொள்ளக்கூடாது. ஒவ்வொரு அஹ்மதிக்கும் தமது பொறுப்புகள் பற்றிய உணர்வு இருக்க வேண்டும். அவர் எங்கிருந்து வந்தாலும் சரி. அவர் சுயமே கவனமாக இருக்க வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று இஸ்லாம் அண்டை அயலாருக்கு அதிகமான உரிமைகளை வழங்கியுள்ளது.

ஹதீகத்துல் மஹ்தியில் (மஹ்தியின் தோட்டத்தில்) இடப்புறமும் வலப்புறமும் உள்ளவர்கள், எல்லா அஹ்மதிகளுக்கும், ஜல்ஸாவில் கலந்து கொண்டு வருகின்ற அனைவருக்கும் பக்கத்து வீட்டுக்காரர்களாவர். எனவே மழை வந்தாலும் அதற்கேற்ப Parking செய்வதற்கு ஜல்ஸா ஏற்பாட்டுக் குழு ஏற்பாடு செய்திருக்கின்றது. மேலும் கடந்த வருடங்களில் நாம் பெற்ற அனுபவங்களிலிருந்து இப்பிரச்சனைகளுக்கு சரியான தீர்வு என்னவென்றால் உங்கள் கார்களை எடுத்துக் கொண்டு வராமல் இலண்டனில் இருந்து இப்பகுதி வரை இரயிலில் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. செலவும் மிகவும் குறைவுதான். எனவே அதனைப் பயன்படுத்துங்கள். Station –லிருந்து அழைத்து வருவதற்கு அல்லது Station –க்கு அழைத்துச் செல்வதற்கு

ஏற்பாடுகள் உள்ளன. ஹதீகத்துல் மஹ்தி (ஜல்ஸா நடைபெறுகின்ற இடம்) வருவதற்கும் பைத்துல் புதூஹ் வருவதற்கும் போவதற்கும், இலண்டன் மஸ்ஜித் வருவதற்கும் போவதற்கும் பஸ் ஏற்பாடுகள் உள்ளன. ஒருவர் இறைவனுக்காக இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்ள முடிவு செய்துள்ளார். எனவே சின்னச்சின்ன கஷ்டங்களை சகித்துக் கொள்ள வேண்டும். அப்பகுதி மிகவும் குறுகிய பகுதியாக இருப்பதால் மிகவும் சிரமமாக உள்ளது என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் முன்னாளில் இஸ்லாமாபாத் பகுதியில் ஜல்ஸா நடத்துவோம். அது இதனை விட குறுகிய பகுதியாக இருந்தது. போகப்போக அஹ்மதிகளுக்கும் பழகி விட்டது. அங்கிருக்கிற குடியிருப்புகளில் வசிப்பவர்களும் பழகி விட்டனர். ஆரம்பத்தில் எங்களுக்கு போக்குவரத்து சிரமமாக இருக்கிறது என்ற புகார் குடியிருப்பு மக்களால் எழுப்பப்பட்டிருந்தது. போகப்போக அது பழகிப் போய் ஆட்சேபனை செய்வதை விட்டு விட்டனர். இப்பகுதியிலும் அதேபோன்று அந்த ஆட்சேபனை நாளடைவில் மறைந்து விடும். ஆனால் ஓர் அஹ்மதியுடைய பணி என்னவெனில் அவர்கள் எவ்வகையிலும் இங்குள்ள குடியிருப்புகளுக்கு சிரமம் தர காரணமாகி விடக்கூடாது. ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். எவரது உள்ளத்திலாவது அஹ்மதிகளைப் பற்றி எதிர்மறை கருத்து இருந்தால் நமது நடைமுறையைப் பார்த்து அம்மக்கள் அதற்காக வெட்கப்பட வேண்டும். பிறகு தமது எதிர்மறை கருத்தை விடுத்து நமக்கு ஆதரவான கருத்து அவரிடம் உருவாக வேண்டும். அதுமட்டுமின்றி அம்மக்கள் நம்மைப் பார்த்து நட்புக்கரம் நீட்ட வேண்டும். நமது நட்பை அவர் பெருமையாக கருத வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதுசம்பந்தமாக கூறினார்கள்:**

ஒருவர் நமது சீடராக இருந்து கொண்டு நமக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டாம். சீடரான பிறகு எவர் தான் கெட்ட பெயர் ஏற்படுத்துவார். பிறகு அதற்கு என்ன பொருள் எனில் உங்கள் முன்மாதிரி உயர்வானதாக இருக்க வேண்டும். உங்களைப் பற்றி விரல் உயர்த்தி ஒருவர் பேசும்போது அது ஜமாஅத்திற்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் நற்பெயர் தேடித் தருவதாக இருக்க வேண்டும். இவையே ஓர் அஹ்மதியை மற்றவரை விட்டு பிரித்துக் காட்டுகிறது. இந்நாட்களில் இபாதத்தின் பக்கம் கவனம் இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ அதேபோன்று ஒருவர் மற்றவருடன் நல்லியல்புடன் கண்ணியத்துடன் பழகுவதும் பர்ளாகும்.

நான் பொறுப்பாளர்களுக்கும் கவனமூட்டியுள்ளேன். விருந்தாளிகளை சிறப்பான முறையில் கவனிக்க வேண்டும் என்று கூறியுள்ளேன். எந்த விருந்தாளியும் புகார் கூட கூறுவதற்கு வாயப்பளிக்கக் கூடாது என்று வலியுறுத்தி உள்ளேன். ஆனால் விருந்தாளிக்கும் ஒரு கடமை உள்ளது. தம்மிடம் பொறுமையையும் விவேகத்தையும் மேற்கொள்ள வேண்டும். கவனமற்ற ஒரு செயலை ஒரு தொண்டரிடம் கண்டால் அவரும் ஒரு மனிதர்தான். தவறு நிகழுவது சாத்தியமே. சில தொண்டர்கள் பலப்பல நாட்கள் பணியாற்றி உள்ளனர். சில தொண்டர்களுக்கு 24 மணி நேரத்தில் வெறும் 2 மணி நேரமே தூங்க வாய்ப்பு கிடைக்கிறது. மனித இயல்பில் பலவீனத்தினால் ஒரு தொண்டர் ஒரு விருந்தாளியின் கேள்விக்கு திருப்திகரமான பதில் தராவிட்டால் அல்லது எவரது கருத்திலாவது விருந்தாளியின் உரிமை நிறைவேற்றப்படவில்லை என்ற எண்ணம் தோன்றினால் நீங்கள் அத்தொண்டரை மன்னிக்க வேண்டும். பெரும்பாலான விருந்தாளிகள் U.K.-வின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருபவர்கள் தான். மேலும் உலகின் மற்ற பகுதியிலிருந்து வருபவர்களும் உள்ளனர். ஒரு தொண்டர் U.K.-வில் இருந்து வந்த ஒரு விருந்தாளியை விட வெளிநாட்டிலிருந்து வந்தவரை அதிகமாக கவனித்தால் அவ்வாறு செய்யவும் வேண்டும்; உடனே உள்ளூர் விருந்தாளிகள் அதனை தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)அவர்கள் ஒரு விருந்தாளியாக எப்படி நடந்து காட்டியுள்ளார்கள் என்ற முன்மாதிரியும் நம்மிடம் உள்ளது. அந்த முன்மாதிரியின்படி நாம் வாழ்ந்து காட்ட வேண்டும். அந்த முன்மாதிரிகள் இன்றும் நமக்கு வழிகாட்டும் விளக்காக உள்ளன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருநாள் வேலைப்பளுவின் காரணத்தால் இரவு உணவு உண்ணவில்லை. இரவில் பசி எடுத்த போது தமது இரவு உணவு பற்றி கேட்டார்கள். வேலையாட்களுக்கு மிகவும் சங்கடமாகி விட்டது. எல்லாரும் உணவு உண்டு முடித்து விட்டார்கள். உணவு எதுவும் மீதமும் இல்லை. இரவு நேரத்தில் கடைகளும் அடைக்கப்பட்டு விட்டன. ஹோட்டலிலிருந்து வாங்கவும் வழியில்லை. ஹுஸூர் (அலை) அவர்களுக்கு சாப்பாடு முடிந்து விட்டது என்று தெரிந்து விட்டதும்

ஏற்பாட்டாளர்கள் அனைவரும் சங்கடப்பட்டனர். விரைவாக உணவு தயாரிக்க முற்பட்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். தேவையில்லை. மீதமுள்ள ரொண்டித்துண்டுகள் இருந்தாலும்போதும். அதனை கொண்டு வாருங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எங்களிடம் உணவு சமைக்கும்படி கூறியிருந்தால் எங்களுக்கு அது பெருமையாகவே இருந்திருக்கும். இதில்தான் பரக்கத்தும் இருந்திருக்கும். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எங்களது சிரமத்தை உணர்ந்து மீதமுள்ள ரொட்டித் துண்டுகளை போதுமானதாக்கிக் கொண்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் இருப்பவர்களும் இந்த முன்மாதிரியைக் காட்ட வேண்டும்.

ஜல்ஸா நாட்களிலும் மற்ற நாட்களிலும் கூட லங்கர்கானாவிலிருந்து சில புகார்கள் எனக்கு வந்து கொண்டேதான் இருக்கின்றன. ஆய்வு செய்யும் போது அவர்கள் பெரிதுபடுத்திக் கூறுகின்ற அளவுக்கு பெரிய தவறுகள் ஏதும் அங்கு நடந்து இருப்பதில்லை. விருந்தாளிகளுக்கும் ஓர் உணர்வு இருக்கும். அதனை கவனிக்க வேண்டும் என்பதும் சரிதான். ஆனால் விருந்தாளிகளும் எதுவும் குறை சொல்வதாயின் சரியான விவரத்தை தர வேண்டும். ரப்வாவிலிருந்து ஜல்ஸா நடைபெறுவதில்லை. ஜல்ஸா நடக்கும்போதும் அவ்வப்போது புகார்கள் கூறப்படும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்திலிருந்து இன்று வரை விருந்தினர் பகுதி செயல்பட்டு வருகிறது. அஹ்மதி விருந்தினர் அதிக அளவில் வந்து செல்கின்றனர். எதுவும் புகார் வரும்போது ஏற்பாட்டாளர் மன்னிப்புக் கேட்கின்றனர். அதேபோன்று காதியான் லங்கர் கானாவிலும் புகார்கள் வருவதுண்டு. அதேபோன்று இங்கு கலீஃபா இருக்கின்ற காரணத்தால் நிரந்தரமான லங்கர்கானா இங்கும் செயல்படுகின்றது. எனவே இங்கு புகார் வந்து கொண்டுதான் இருக்கின்றது. குறிப்பாக ஜல்ஸா நாட்களில் புகார்கள் வருகின்றன. மற்ற பகுதிகளில் சாதாரண நாட்களில் விருந்தோம்பல் நடைபெறுவதில்லை. மக்கள் வந்து செல்லும் போதும் அங்கு மாநாடுகள் நடக்கின்ற போதும் விருந்தோம்பல் நடைபெறுகின்றன. அந்நிலையிலும் கூட புகார்கள் எழவே செய்கின்றன. விருந்தோம்புபவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிகளுக்கு கண்ணியம் செய்ய வேண்டும். தவறு நடந்தால் வருத்தம் தெரிவிக்க வேண்டும். நிரந்தரமான லங்கர் செயல்படும் இடத்தில் பணியாற்றுபவருக்கும் கவனமூட்ட விரும்புகிறேன். காதியானிலும் சரி; ரப்வாவிலும் சரி; இங்கு லண்டனிலும் சரி உங்களிடம் வருகின்ற விருந்தாளிகளுக்கு கண்ணியம் செய்யுங்கள். மீண்டும் நான் விருந்தாளிகளின் பக்கம் வருகிறேன். அவர்கள் பொறுமை விவேகத்தைக் காட்ட வேண்டும். ஜல்ஸாவின் இந்நாட்களைப் பல்வேறு பிரிவுகளில் வேலை செய்யும் தன்னார்வத் தொண்டர்கள், யுனிவர்சிட்டி, காலேஜின் மாணவர்கள் இந்த சுற்றுப்புற சூழலில் வாழ்ந்துவரும் நிலையிலும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற காரணத்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தினர்களுக்கு சேவை செய்வதற்காக தம்மை அர்ப்பணித்து வருகின்றனர். எனவே அவர்களின் பலவீனத்தை பெரிதுபடுத்தாதீர்கள். அவர்களின் உணர்வுக்கு மதிப்பளியுங்கள். அவ்வுணர்வின் அடிப்படையில் சேவைக்காக தம்மை அர்ப்பணித்துள்ளார்களோ அவர்கள் உணர்வுக்கு மதிப்பளியுங்கள். ஜமாஅத் அல்லாத விருந்தினர்களுக்கு தனி ஏற்பாடு உள்ளது. அந்த விருந்தாளிகளுக்கு மிகச் சிறந்த விருந்தோம்பல் செய்வதற்கு முயற்சி செய்யப்படுகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கூற்று உங்களிடம் ஏதாவது ஒரு சமூகத்தை சார்ந்த கண்ணியத்திற்குரிய மனிதர் வந்தால் அவருக்கு மிக அதிகமான கண்ணியம் செய்யுங்கள். இங்கு ஜல்ஸாவுக்கு வருகிற விருந்தாளிகள் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அவர்கள் இங்கு வந்ததன் நோக்கம் ஜல்ஸாவைக் கேட்பதும் அதிலிருந்து ஆன்மீக பயன் அடைவதுமே ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தெளிவுபடுத்தி விட்டார்கள். இந்த ஜல்ஸா உலகில் நடக்கின்ற திருவிழாக்கள் போன்றதன்று. உலக திருவிழாக்களில் மக்கள் நாள் முழுவதம் அங்குமிங்கும் சுற்றிக் கொண்டும், கேளிக்கைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டும் திரிகின்றனர். உண்ணல், குடித்தல், கூச்சல் தவிர வேறு எதுவும் அங்கு நடைபெறுவதில்லை.

மூன்று நாட்கள் ஒரு மனிதன் பௌதீக உணவுக்குப் பதில் ஆன்மீக உணவின் பக்கம் கவனம் செலுத்தினால் அப்போதுதான் தமது பைஅத் நிபந்தனையை நிறைவேற்றியவராவார். ஜல்ஸாவின்

நிகழ்ச்சிகளில் ஆண்களும், பெண்களும் கலந்து கொள்வது மிகவும் அவசியமானதாக்குங்கள். கேட்ட விஷயங்களை வாழ்வின் பகுதியாக்குங்கள்.

எந்தப் பெண்ணும், இளைஞரும், ஆண், பெண், குழந்கைள் எவரும் ஜல்ஸா நடைபெறும் நேரத்தில் கடைகளில் சுற்றுதல், விளையாட்டுகளில் ஈடுபடுதல் தென்படவே கூடாது. பெண்கள் மற்றும் சின்ன குழந்தைகளுக்கு தனி இடம் உள்ளது. குழந்தைகள் கூச்சல் இடும்போது குழந்தைகளுடன் வராத பெற்றோர்கள் அல்லது பெரியவர்களாகி விட்ட குழந்தைகளைக் கொண்ட பெண்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

ஆறு, எட்டு வயது கொண்ட குழந்தைகளை அவர்களின் பெற்றோர் நன்றாக புரிய வைத்து அழைத்து வர வேண்டும். நாம் ஜல்ஸாவுக்கு போகிறோம். அந்த அமர்வு 2-3 மணி நேரம் நடைபெறும். நீங்கள் அமைதியாக அமர வேண்டும். பல குழந்தைகளை பெற்றோர் புரிய வைத்து கூட்டி வருகின்றனர். அவர்களும் அமைதியாக இருக்கின்றனர். இந்த சபைகளின் கண்ணியத்தை சிறு வயதிலேயே குழந்தைகளின் மனதில் அமர்த்துங்கள். வருடம் முழுவதும் அவர்களுக்கு வீட்டில் பயிற்சி கொடுக்க வேண்டும். சில வேளைகளில் அத்ஃபால், நாஸிராத் -களின் வகுப்புகளில் அமைதியாக அமர்ந்து நிகழ்ச்சிகளைக் கேட்கும் பயிற்சி தரப்படவில்லை என்ற புகார்களும் வருகின்றன. நாஸிராத்களிடம் குறும்பு குறைவாக காணப்படுகிறது. அத்ஃபால்களுக்கு நேரம் செல்லச் செல்ல குறும்பு கூடி விடுகிறது. தங்களுக்குள் பேச ஆரம்பித்து விடுகின்றனர். முழு வருடமும் பெற்றோர்களும், கிளை அமைப்புகளும் பயிற்சி அளித்து வர வேண்டும். ஜல்ஸாவின் நாட்களில் எந்த புகாரும் எழாத அளவுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். குழந்தைகளில் கணிசமானோர் இங்கு டூட்டி தருகின்றனர். மிகவும் அன்போடு டூட்டி தருகின்றனர்.

ஆனால் பல குழந்தைகள் டூட்டி தருவதில்லை. அவர்கள் மற்ற நாடுகளிலிருந்து வந்த குழந்தைகள் ஆவர். அவர்கள் விளையாட்டுகளில் ஈடுபட்டு ஜல்ஸா கேட்பவர்களுக்கு தொந்தரவு தருகின்றனர். எனவே இந்த அடிப்படையில் ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்கள் தமது குழந்தைகளுக்கு கண்டிப்பாக பயிற்சி அளிக்க வேண்டும். அப்போதுதான் பெரியவர்கள் ஜல்ஸா கேட்கின்றனர் என்ற உணர்வு குழந்தைகளுக்கு ஏற்படும். நமது மார்க்க மஜ்லிஸ்களில் ஆண்களும் பெண்களும் அமைதியாக இருந்து ஜல்ஸா கேட்பதற்கு சுயமே தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அமைதியாக இருக்கமாறு அவர்களை டூட்டிக்காரர்கள் கூறும் அவசியம் ஏற்படவே கூடாது.

இன்னொரு முக்கியமான விஷயத்தின் பக்கம் நான் கவனமூட்ட விரும்புவது என்னவெனில், உங்கள் சுற்றுச்சூழலில் எப்போதும் கவனம் செலுத்த வேண்டும். ஜமாஅத்திற்கு இறைவனே பாதுகாப்பு தர வேண்டும். தரவும் செய்கிறான். நிரந்தரமாக செய்கிறான். அவனிடம் நாம் உதவி தேடி அவனிடம் குனிந்து வந்தோம் எனில் இபாதத்களிலும் கவனம் இருக்கும். இறை உதவியும் நமக்கு கிடைக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் "நான் உன்னுடனும் உனது அன்பிற்குரியவர்களுடனும் இருக்கிறேன்" என்ற வாக்குறுதி அளித்துள்ளான். கடைசி வெற்றி உங்களுடையதே. இதிலிருந்து ஜமாஅத்தை எப்போதும் தனது பாதுகாப்பில் இறைவன் வைப்பான் என்று தெரிகிறது இன்ஷா அல்லாஹ். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் முன்னேற்றம் பெற வேண்டியுள்ளது. ஆனால் எதிரிகள் எப்படியாவது நமக்கு நஷ்டம் ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்து வருகின்றனர். சில வேளைகளில் தனிப்பட்ட முறையில் சில தியாகங்களை செய்ய வேண்டியுள்ளது. சில வேளைகளில் நமது கவனமின்மையிலிருந்து எதிரிகள் பயனடைந்து விடுகின்றனர்.

இன்றைய உலகில் எந்தப் பணியை செய்தாலும் மிக கவனத்துடனும் எச்சரிக்கையுடளும் செய்ய வேண்டியுள்ளது. அறிவும் இதையே வலியுறுத்துகிறது. எனவே ஏற்பாட்டாளர்கள் Checking -ற்கு வசதியாக சில ஏற்பாடுகளை செய்துள்ளனர். அதனால் ஜல்ஸா திடலுக்குள் வந்து சேர்வதற்கு சற்று நேரம் பிடிக்கலாம். எவ்வாறிருப்பினும் இந்த புதிய ஏற்பாட்டிற்கு எல்லாரும் ஒத்துழைப்பு தர வேண்டும்.

Checking செய்பவர்களும் கூட ஒருமுறை வெளியில் போய் விட்டு திரும்ப வருவதாயின் அந்த சேனல் வழியாகவே கடந்து உள்ளே வர வேண்டும்.

மற்றவர்களும் அவ்வாறே செய்ய வேண்டும். தமது சுற்றுப்புறத்தை எப்போதும் கண்காணித்து வர வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு தூய அஹ்மதியும் ஜமாஅத்தை எல்லா விதமான நஷ்டங்களில் இருந்து காப்பாற்ற வேண்டுமே என்ற கவலையில் மூழ்கியிருக்கிறார். எனவே அந்த அடிப்படையிலும் சுற்றுப்புறத்தை கவனிக்க வேண்டும். எனவே இந்நாட்களில் எவர் மீதாவது சந்தேகம் ஏற்பட்டால் ஒருவரின் செயலில் வித்தியாசம் தெரிந்தால் உடனே அவர் ஏற்பாட்டாளர்களிடம் தெரிவித்து விட வேண்டும். குறிப்பாக பெண்கள் தெரிவித்து விட வேண்டும். குறிப்பாக பெண்கள் உஷாராக இருக்க வேண்டும். லஜ்னா பகுதியில் எந்த பெண்ணாவது முழுதாக முகத்தை மூடிக்கொண்டு நடமாடக் கூடாது. பல வருடங்கள் முன்பு இதுபோன்ற ஒரு சம்பவம் நடந்தது. ஒரு ஆண், பெண்வேடத்தில் உள்ளே வந்தார். Checking நன்றாக நடக்கிறது. நாமும் மிக எச்சரிக்கையாகவே இருக்கிறோம் என்று கருதிவிட வேண்டாம். கவலைப்படத் தேவையில்லை. Relax ஆக இருக்கலாம் என்று நினைக்க வேண்டாம். கவனமற்ற நிலையில்தான் பல நஷ்டங்கள் ஏற்படுகின்றன. எனவே எப்போதும் ஒரு மூஃமின் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பிறகு தூய்மை. இதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். ஜல்ஸாவின் சூழலில் எந்த அசுத்தமான பொருள்களையும் ஆங்காங்கே எறியக் கூடாது. அதற்கென சேவகர்கள் உள்ளனர். அவர்கள் அதனை எடுப்பர் என்று நினைக்கக் கூடாது. நீங்களே சென்று Dustpin இருக்கிற இடத்தில் சென்று அசுத்தமான பொருள்களை இட வேண்டும். Disposable கிளாஸ்கள், காகிதங்கள் அல்லது வேறு எதுவாயினும் சரியே. கொஞ்சம் கஷ்டப்பட்டாலும் சுற்றுப்புறம் சுத்தமாக இருக்கும். பிறகு குளிப்பறை, கழிப்பறைகள் இவற்றையும் பயன்படுத்திய பிறகு நன்றாக சுத்தம் செய்து விட்டு வர விருந்தினர்கள் முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் அப்பகுதியில் பணியாற்றுகிற சேவகர்களும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த சிறப்பான ஆட்கள்தான். தூய்மை செய்து விட்டு வருவதில் உங்கள் கவுரவம் குறையப்போவதில்லை. மாறாக அதனால் உங்கள் கவுரவம் அதிகரிக்கவே செய்யும். இது நல்லொழுக்கத்தின் ஒரு வெளிப்பாடே ஆகும். 'அடுத்து வரக்கூடியவரின் வசதிக்காக நீங்கள் விமான்ஙகளில் கூட கழிப்பறைகளில் சுத்தம் செய்து விட்டு செல்லவும்' என்று எழுதப்பட்டு உள்ளது.

சேவகர்களிடம் Inspection நடந்த அன்று நான் சேவகர்களிடம் ஒரு சம்பவத்தைக் கூறினேன். ஒரு பெண்ணுக்கு தூய்மை செய்யும் பொறுப்பு தரப்பட்டிருந்தது. குளியல் அறைக்கு யார் போய் விட்டு வந்தாலும் உடனே சென்று அப்பெண் அந்த குளியறையை சுத்தம் செய்து விட்டு வந்து விடுவார். அதைப் பார்த்து விட்டு ஒருவருக்கு எண்ணம் வந்தது. இப்பெண் நல்ல அனுபவமுள்ள துப்புறவு பணியாளர் போலும். பிறகு அவர் அப்பெண்ணைப் பற்றி விசாரித்தபோது, ஆபா மஜிதா ஷா நவாஸ் என்ற பெண்மணி என்று தெரிய வந்தது. பெரிய அரசு அதிகாரியின் மகள். அவரது கணவரும் கூட பெரிய தொழிலதிபரின் மனைவியாக இருந்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிகளுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இப்பணி செய்தார்கள். ஜமாஅத்திற்காக பெரும் பொருள் தியாகம் செய்யக்கூடியவர்கள அந்தப் பொருள் தியாகத்தையே போதுமானதாகக் கருதவில்லை. தொண்டு செய்வதிலும் மூழ்கி இருந்தார்கள். அல்லாஹ் அன்னாரின் சந்ததிகளுக்கும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் பாக்கியத்தை தொடர்ந்து வழங்கி வருவானாக. எவ்வாறிருப்பினும் தூய்மை என்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கூற்றிற்கேற்ப ஈமானின் ஒரு பகுதியாகும். எனவே சிறு சிறு தூய்மையிலும் கவனம் செலுத்துங்கள். தூய்மை ஒரு மூஃமினுக்கு அடையாளமாக கூறப்பட்டுள்ளது. எனவே ஜல்ஸாவில் கலந்து கொள்கிற ஒவ்வொரு விருந்தாளியும் இதன் பக்கம் செலுத்துங்கள். நாம் போகலாம் பின்னர் சுத்தம் செய்யும் சேவகர்கள் வந்து இதனை சுத்தம் செய்வார்கள் என்று ஒருபோதும் கருத வேண்டாம். இன்று கூட குறிப்பாக மழை பெய்கிறது. சிறு அசுத்தமும் அதிகமாக தெரியும். குளிப்பறைக்குள் செல்பவர்கள் சுத்தம் செய்து விட்டு வர வேண்டும். ஏற்பாட்டாளர்களும் கவனிக்க வேண்டும். இன்று முழுவதும் மழை இருக்கும் என்று முன்னறிவிக்கப்பட்டுள்ளது. பிறகு இன்று அரசும், M.T.A -வும் அறிவிப்பு செய்கிறது. நோய் தடுப்பு மருந்துகள் எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே வரக்கூடிய ஒவ்வொருவருக்கும் ஹோமியோபதி மருந்து தரப்படுகிறது. இன்று தரப்படுகிறதா என்று தெரியவில்லை. இதுவரை வாங்காதவர்கள் அதற்குரிய பகுதிக்கு சென்று மருந்து வாங்கிக் கொள்ள வேண்டும். விருந்தாளிகளுக்கு சேவகர்கள் இவ்விஷயத்தில் முழு ஒத்துழைப்பு தர வேண்டும். எவருக்காவது தமக்கு ஃபுளூ காய்ச்சல் இருக்குமோ என்ற சந்தேகம் இருந்தால் ஜல்ஸாவுக்கு வரும் முன்னர் சம்பந்தப்பட்ட

டாக்டரிடம் ஆலோசனை பெறுங்கள். ஜல்ஸாவுக்கு வருகின்ற மற்றவர்களை கருத்தில் கொண்டாவது ஒருவர் தனது நோயிற்கு மருத்துவம் செய்ய வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் எல்லா நோய்களிலிருந்தும் பாதுகாப்பானாக. ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்கள் ஜல்ஸாவின் பரக்கத்துகளை எடுத்துக் கொண்டு வீடு திரும்பட்டுமாக. மற்ற நாடுகளில் இருந்து வந்த விருந்தினர்களை குறிப்பாக பாகிஸ்தான் பங்களாதேஷ் இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்கள் உங்கள் விசா முடிவதற்குள் தத்தமது நாட்டிற்கு திரும்பிச் செல்ல முயலுங்கள் என்று எப்போதுமே அவர்களிடம் கூறி வருகிறேன். ஏனெனில் இம்முறை விசா தருபவர்களிடமிருந்து ஜல்ஸாவுக்காக வரக்கூடிய அஹ்மதிகள் இங்கிருந்து திரும்பிச் செல்வதில்லை என்று ஆட்சேபனை வந்துள்ளது. இது முற்றிலும் தவறாகும். கடந்த ஆறு ஏழு வருடங்களுக்கு முன்னரிருந்து நான் பார்த்து வருகிறேன். எவரெல்லாம் ஜல்ஸாவுக்கு வருவார்களோ அவர்கள் திரும்பிப் போய் விடுகிறார்கள். அவ்வாறு எவராவது தங்கினாலும் அவர்களின் எண்ணிக்கை 4 அல்லது 5 பேருக்கு மேல் அதிகம் இருக்காது. அவர்களுக்கும் ஜல்ஸாவின் விசாவில் வந்து இங்கு தங்கியதற்காக தண்டனை கிடைக்கிறது. எவ்வாறிருப்பினும் இல்லை என்று சொல்லும் அளவுக்கு மிகச் சிலரே இவ்வாறு செய்கின்றனர். எனினும் இது தவறான செயலாகும். இதனால் ஜமாஅத்திற்கு கெட்ட பெயர் ஏற்படுகிறது. இந்த செயலால் ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் நிய்யத்தில் எவரும் வந்தால் அவரது வழியும் இதனால் அடைபட்டு விடுகிறது. இது எவ்வகையிலும் ஓர் அஹ்மதியின் அடையாளமன்று. பிறகு ஜல்ஸா ஏற்பாட்டின் கீழ் தங்குமிடமும் விருந்தோம்பலும் நடைபெறுகிறது. இதுவும் பொதுவாக இரு வாரங்கள் தான் செய்யப்படும். அதற்கு பிறகு விருந்தோம்புவரின் அனுமதியின்றி தங்கியிருப்பது சரியன்று. இது அழையாத விருந்தாளியின் செயலாகும். இஸ்லாத்தில் இது மிகவும் வெறுக்கத்தக்க செயலாகும். மேலும் தனது நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்பவர்களும் தேவையில்லாத சுமையை அவர்களுக்கு தரக்கூடாது. உங்களை தங்க வைத்து அருளை காட்டியுள்ளார்கள். சிலர் என்னிடம் புகாரும் செய்கிறார்கள். இன்ன விருந்தாளி அவரது உறவினரின் வீட்டில் தங்கியிருக்கிறார். (விசா காலம் இன்னும் இருப்பதால்) மீதி நாட்களுக்கு ஜமாஅத்தின் ஏற்பாட்டின் கீழ் தங்க விரும்புகிறார். மறுக்கப்பட்டால் ஆட்சேபனை செய்கின்றனர். எனவே விசா பெறும் போது எவ்வளவு சுமையை உறவினர்களுக்கு கொடுக்க முடியும் என்பதனையும் யோசிக்க வேண்டும். இதுபோன்ற புகார்கள் வரக்கூடாது. ஜல்ஸாவின் நோக்கம் அன்பை அதிகரிப்பது. இதனால் ஒருவருக்கொருவர் அன்பு அதிகரிப்பதற்கு பதில் குறையும் எனில் ஜல்ஸாவின் நோக்கம் நிறைவேறாமல் போய் விடும். எனவே விருந்தோம்புபவர் சற்று தாராளமாக நடந்து கொள்ள வேண்டும். எனினும் விருந்தாளிக்கும் உணர்வு இருக்க வேண்டும. எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். உங்கள் இந்த பயணம் இறைவனுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இந்த பயணத்தில் உலகாதாயம் பார்க்க வேண்டாம். ஜல்ஸாவுக்காக உங்களது பயணத்தை மேற்கொள்ள முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் எல்லாருக்கும் அதற்கு வாய்ப்பளிப்பானாக. இன்னொரு முக்கிய விஷயம் என்னவென்றால் ஜல்ஸாவின் வழிகாட்டல்கள் அச்சிட்டு விநியோகிக்கப்படுகிறது. அதனை படியுங்கள். அதன்படி அமல்செய்ய முயலுங்கள். இன்று மழை பெய்யும் என்று முன்னறிவிக்கப்பட்டுள்ளது. பருவ நிலையை அல்லாஹ் சரிசெய்து தருவதற்கும் துஆ செய்யுங்கள். அல்லாஹ்வின் அருளால் அப்போதுதான் ஜல்ஸாவின் நடவடிக்கைகளை கேட்க முடியும். மழை நேரத்தில் கூடாரங்களில் இருப்பவர்களுக்கு சொற்பொழிவுகள் சரியாக கேட்காது. அந்த பிரச்சனையும் ஏற்படும். பிறகு போக வரவும் சிரமமாகி விடும். பெண்கள் குழந்தைகளுக்கும் பிரச்சனையாகி விடும். எனவே பருவ நிலையை அல்லாஹ் நமக்கு சாதகமாக்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 24.07.2009

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**